வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.4379/ஆ4/2025 நாள்: 01.12.2025

பொருள் : பள்ளிக்கல்வித்துறை –தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –2025–26 கல்வியாண்டு –6 முதல் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அரையாண்டுத் தேர்வுகள் நடத்துதல் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுரை – வழங்குதல் –சார்பு

பார்வை : தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் 048688/எம்1/இ1/2025 நாள் 22.11.2025

===============

மேற்காணும் பொருள் சார்பாக 2025–26 ஆம் கல்வியாண்டிற்கான 6 முதல் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான அரையாண்டு தேர்வுகள் அட்டவணை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. தேர்வுக்கால அட்டவணையின்படி தேர்வுகள் நடத்தப்பட வேண்டும் மேலும் கீழ்காணும் அறிவுரைகளை பின்பற்றி செயல்படுமாறு அனைத்து வகை பள்ளித்தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

1. பள்ளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வினாத்தாள் கட்டுக்காப்பு மையத்திற்கு சென்று தங்கள் பள்ளிகளுக்கு தேவையான வினாத்தாட்கள் பெறப்பட்டுள்ளதா மற்றும் பாடவாரியாக போதுமான வினாத்தாட்கள் உள்ளதா என சரிபார்த்து உறுதி செய்துகொள்ள வேண்டும்.
2. தேர்வுகால அட்டவணையில் தெரிவித்துள்ள நாள் மற்றும் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே தேர்வுகள் நடத்தப்படவேண்டும்.
3. வினாத்தாட்கள் படித்துப் பார்பதற்காக வழங்கப்படும் 10 நிமிட நேரத்தில் எந்த வித அறிவிப்பும் வழங்கக் கூடாது.
4. தேர்வுகள் நடைபெறும் நாட்களில் தேர்வு நேரம் முடிவுற்ற பின்பு தான் மாணவர்களிடமிருந்து விடைத்தாட்கள் வாங்க வேண்டும். தேர்வு நேரம் முடியும் முன்னரே எக்காரணம் கொண்டும் மாணவர்களிடம் இருந்து விடைத்தாட்கள் பெறக்கூடாது.
5. ஒவ்வொரு தேர்வு நடைபெறும் நாள் அன்று காலை 8.00 மணிக்கு அன்று நடைபெறும் தேர்விற்கு உண்டான வினாத்தாட்களை வினாத்தாள் கட்டுக்காப்பு மையத்திலிருந்து

முகப்பு கடிதத்துடன் தனி நபர் மூலம் வினாத்தாட்கள் பெற்று தேர்வுகள் நடத்தப்பட வேண்டும்.

6. தேர்வுகள் நடைபெறும் நாள் அன்று மீதமுள்ள சார்ந்த பாட வினாத்தாட்களை மந்தன முறையில் தலைமை ஆசிரியர்கள் தங்கள் பாதுகாப்பில் வைத்துக்கொள்ள வேண்டும்.
7. தேர்வுகள் முடியும் முன்பே வினாத்தாட்களை எக்காரணம் கொண்டும் அலைபேசியில் ஆசிரியர்கள் புகைப்படம் எடுக்க கூடாது. மற்றவர்களிடம் பகிரவும் கூடாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.
8. அரையாண்டு தேர்வுகளை எந்தவித புகாருக்கும் இடமளிக்காவண்ணம் நடத்தி முடிக்க அனைத்து வகை உயர்/ மேல்நிலைப்பள்ளி பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் மீள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு

1. அரையாண்டு தேர்வுகள் அட்டவணை
2. கூடுதல் அறிவுரைகள்

//ஒம். //
முதன்மைக்கல்விஅலுவலர்,
வேலூர்.

பெறுநர்:

அனைத்து வகை அரசு உயர்/மேல்நிலை/நிதியுதவிப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக்பள்ளி முதல்வர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்:

மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை/தனியார் பள்ளிகள் /தொடக்கக் கல்வி )
அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் தெரிவிக்கலாகிறது.

## அரையாண்டுத்தேர்வு சிறப்பாக நடத்திட தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கான அறிவுரை

1) மாணவர்களுக்கு தேர்வு கால அட்டவணை தெரிவிக்கவும் மற்றும் பள்ளி தகவல் பலகையில் கட்டாயமாக ஒட்டப்பட வேண்டும்.
2) மாணவர்களுக்கு தேர்வு எண் வழங்கப்பட்டதை உறுதிசெய்யவேண்டும்.
3) தேர்வறையில் உள்ள கரும்பலகையில் அறைக்கு ஒதுக்கப்பட்ட மாணவர்களின் விவரம் வகுப்பு வாரியாக எழுதவேண்டும் (முற்பகல்/பிற்பகல்).
4) மாணவர்கள் எந்த அறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளார்கள் என்ற விவரத்தை தகவல் பலகையில் (Notice Board). அனைவருக்கும் தெரியும் வகையில் ஒட்டப்பட வேண்டும்.
5) வகுப்பு மற்றும் பிரிவு வாரியாக மாணவர்களின் எண்ணிக்கை, மாணவர்களுக்கான தேர்வறை ஒதுக்கீடு விவரங்கள் தெளிவாக வைத்திருத்தல் வேண்டும்.
6) மாணவர்களுக்கு அறை ஒதுக்கப்படும்போது ஒரு வகுப்பிற்கு 20 மாணவர்கள் மட்டுமே தேர்வெழுத வழி வகை செய்ய வேண்டும்.
7) 6 முதல் 12 வகுப்பு தேர்வுகளுக்கு அனைத்து வகை ஆசிரியர்களையும் தேர்வுப்பணியில் ஈடுபடுத்த வேண்டும்.
8) அனைத்து ஆசிரியர்களுக்கும் தேர்வுப்பணி ஒதுக்கீட்டை முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும்.
9) தேர்வறையில் ஆசிரியர்கள் கண்காணிப்பு பணியைத்தவிர செல்போன் பேசுவது, செய்தித்தாள் வாசிப்பது, விடைத்தாள் திருத்துவது போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது.
10) பொதுத்தேர்வை போல ஒவ்வொரு அரை மணிநேரத்திற்கும் மணியடிக்க வேண்டும். மணி அடிக்கும் நேர விவரத்தை மணிஅடிப்பவருக்கும் தெரிவித்து சரியாக கடைபிடிக்க வேண்டும்.
11) வினாத்தாள் வழங்கவும், தேர்வு முடிந்த பின் விடைத்தாள் பெறவும் உரிய ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். விடைத்தாள் மதிப்பீடு செய்ய, விடைத்தாளுடன் வினாத்தாள், மதிப்பெண் பட்டியல், E-SLIP விவரங்கள் அனைத்து பூர்த்தி செய்து தலைமையாசிரியர் ஒப்பத்துடன் வழங்கவேண்டும்,
12) அரையாண்டு தேர்விற்கான மாணவர்களின் வருகை பதிவேடு தினமும் இவ்வலுவலகம் மூலமாக அனுப்பப்படும் Google Sheet –ல் பதிவுகள் கட்டாயம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

//ஓம். //
முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.